**இரத்தினபுரி பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 20 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 10 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இரத்தினபுரி பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் வைப்புக்களின் பெறுவனவு ரூபா 11,594 இனால் குறைத்தும் மற்றும் வைப்புக்களின் கொடுப்பனவு ரூபா 23,625 இனால் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,178 தொகையான கணனி மேசையொன்று நிலையான சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 14,700 தொகையான வெகும் கிளீனர் இயந்திரம் மீண்டெழும் செலவினமாகக் கணக்கீடு செய்யப்படமையால் மூலதனச் செலவினம் மற்றும் நிலையான சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 60,163 தொகையான செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக சாட்டப்பட்டமையின் காரணமாக ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 17,850 கூட்டுத் தொகையான நுகர்வுப் பொருட்கள் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் படியான மீதிக்கும் இடையே ரூபா 4,724,355 கூட்டுத் தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>(அ) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | வழங்கப்பட்ட உப கட்டுநிதியொன்று அது வழங்கப்பட்ட பணி நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் 23 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 1,347,591 |

கூட்டுத்தொகையான 23 உப கட்டுநிதிகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் உரிய காலதாமதம் முற்பணம் வழங்கப்பட்டு 11 வருடங்கள் முதல் 5 மாதங்கள் வரையான கால வீச்சினைக்கொண்டிருந்தது.

| | |
|---|---|
| (ஆ) நிதிப்பிரமாணம் 395(இ) | வங்கிக் கணக்குள்ள சகல திணைக்களங்களினாலும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 செப்தெம்பர் வரையிலும் 2016 சனவரி முதல் யூலை வரையான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப்பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 65,759 கூட்டுத்தொகையான 13 நானாவித வைப்புக்கள் மற்றும் 06 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 517,567 கூட்டுதொகையான வைப்புக்கள் என்பவற்றை ஓய்வுபெறச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,160,459 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,479,511 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 3,319,052 குறைவொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 3,319,052 இனால் குறைவடைந்தமை தொடர்பில் 02 விடயங்களின் வருமானம் ரூபா 7,387,967 இனால் குறைவடைந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 301 | 292 | 67 |
| வாடகை | 766 | 261 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 525 | 680 | 183 |
| ஏனைய வருமானம் | 41,165 | 24,129 | 23,381 |

#### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது ஆதனவரி, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு என்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவினைவிட முறையே 02 சதவீதம், 32 சதவீதம் மற்றும் 11 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வாடகை வருமானம், சேவைகளுக்கான கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் மற்றும் ஏனைய வருமானங்கள் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவினை விட

முறையே 66 சதவீதம், 20 சதவீதம், 67 சதவீதம் மற்றும் 64 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன.

### 2.3.3 ஆதனவரி

சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக 2013 பெப்ரவரி 23 ஆந் திகதிய பொதுச்சபைக் கூட்ட அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளாமல் சபைக்கு கிடைக்கின்ற வரி வருமானம் மாத்திரம் ஏடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. 2016 செப்தெம்பர் 01 ஆந் திகதி வரையில் முன்னைய ஆண்டில் ரூபா 233,350 தொகையான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்ட 464 நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டில் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படாதிருந்தமை தொடர்பாக சபை பின்தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.5 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 பெப்ரவரி முதல் 2016 திசெம்பர் வரையான கால எல்லைக்குரிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் 2017 யூன் வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 செயலாற்றல்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டின் பிரகாரம் சபை நிதியம் மற்றும் ஏனைய நிதியுதவியின் கீழ் முறையே ரூபா 23,000,000 மற்றும் ரூபா 105,000,000 ஆக மூலதனச் செயற்திட்டத்திற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், உரியவாறு அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. எனினும் சபை நிதியம் மற்றும் ஏனைய நிதியுதவிகளின் கீழ் முறையே ரூபா 8,607,242 மற்றும் ரூபா 109,870,819 தொகைகளாக கூட்டுமொத்தமாக ரூபா 118,478,061 மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 06 விடயங்களை மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட 08 விடயங்களுக்குரிய 45 பொருள் அலகுகள் மற்றும் 28 புத்தகங்கள் என்பவற்றின் பற்றாக்குறை தொடர்பாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணம் 103 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைமை அலுவலகத்தாலும் உப அலுவலகத்தாலும் பேணப்பட்டுச் சென்ற 02 வங்கிக் கணக்குகளுக்காக ஒரு காசேடு பேணப்பட்டிருந்ததுடன் இந்த நிலைமை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சீராக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபைக்குச் சொந்தமான 70 மயான நிலங்கள் காணப்பட்ட போதிலும், அந்த மயான நிலங்களை நிலஅளவை செய்யப்பட்டு சபைக்கு உரிய பிரகாரம் கையேற்று பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் சில வருடங்கள் முதல் ஓடக்கூடிய நிலையில் காணப்படாதிருந்ததுடன் 2016 நவம்பர் வரையிலும் பழுதுபார்ப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சமர்ப்பிக்கப்பட்ட மின்சாரப் பட்டியல் பதிவேட்டின் பிரகாரம் 2012 திசெம்பர் முதல் 2016 ஆகஸ்ட் வரை பலாபத்தல சுகாதார சேவை நிலையம் என்ற பெயருக்கு அனுப்பப்பட்டிருந்த மின்சாரப்பட்டியலுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 104,921 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் சபைக்குரிய அந்தக் கட்டிடம் பொலிஸ் காவலரண் நடாத்திச் செல்லப்படுகின்ற நிலையமாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) புதிய மீஹிட்டிய வீதிக்கு கொங்கிரீட் இடும் வேலை

(i) மேற்கூறப்பட்ட வேலைக்காக ரூபா 994,357 தொகை வ/ப மல்வல சணச சங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் நிர்மாணங்களை ஆரம்பிக்குமாறு சபையினால் அறிவிக்கப்பட்ட கடிதத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் தேவையான கல், மணல் போன்ற பொருட்கள் வேலைத்தலங்களுக்குக் கொண்டுவரப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு வைக்க வேண்டியமைக்காக அறிக்கையொன்று சங்கத்தினால் சபைக்கு வழங்க வேண்டியதாக அறவிக்கப்பட்டிருந்த போதிலும், சங்கத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மதிப்பீட்டின் பிரகாரம் அந்தப் பொருட்கள் ஒழுங்காக வைக்கப்பட வேண்டிய தேவை காணப்பட்டது.

(ii) மதிப்பீட்டின் பிரகாரம் கொங்கிரீட் இடவேண்டிய அளவின் நீளம் 590 அடியாக இருந்ததுடன் கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் நீளம் 609 அடியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், 2016 திசெம்பர் 16 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது தொழில்நுட்ப உத்தியோகத்தரால் நீளம் 654 அடிகளாகக் காண்பிக்கப்பட்டதுடன் கொடுப்பனவு செய்யப்பட்ட அளவைவிட மேலதிகமாக நீளம் 45 அடி நிறைவேற்றப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், பல்வேறு வேலைகளின் கீழ் பல்வேறு நிறுவனங்களின் மூலம் கொங்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட மீஹிட்டிய வீதியில் இந்த வேலைக்குரிய பகுதி தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தனது ஆரம்ப மதிப்பீட்டைத் தயாரிக்கும் செய்யும் போதும், அளவிடை அறிக்கையிடல்களின் போதும் குறிப்பாகவும் விளக்கமாகவும் காண்பிக்கப்படாதிருந்ததுடன் கணக்காய்வில் பரிசோதனைக்குட்படுத்திய சந்தர்ப்பத்தின் போது வேலைக்குரிய பகுதியை குறிப்பாகவும் விளக்கமாகவும் இனங்காண்பதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு முடியாதிருந்தது.

(iii) நிறைவேற்றப்பட்ட வேலைக்காக காண்பிக்கப்பட்ட வீதிகளின் மேற்பரப்பின் ஆரம்பப் பகுதியில் சில இடங்களில் கொங்கிரீட் படை உடைந்திருந்தடன் சில இடங்களில் சீமெந்து சாந்து இடப்பட்டிருந்தது. தொடர்ச்சியாக நிர்மாணிக்கப்பட்ட 597 அடி நீளமான பகுதியில் சில இடங்களிலும், மிகுதி 57 அடி பகுதியில் அதிகரித்த அளவிலும் ¾’’ கல் குவிந்திருந்தது.

(ஆ) நுகேபொல தெஹெனகந்த வீதியின் பகுதியொன்றை திருத்தியமைத்தல்

---

(i) 2015 மார்ச் 27 ஆந் திகதிய FC/SABP/4/2/2015 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டமொன்றின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 25 மில்லியனுக்குக் குறைவான எந்தவொரு செயற்பாடுகளும் கட்டம் கட்டமாகப் பிரித்து அதனை வெவ்வேறு அபிவிருத்தி வேலையாக தனித்தனியாகக் காண்பித்து உடன்படிக்கை செய்ய முடியாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணானதாக ரூபா 2,161,556 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட வேலைப் பெறுமதியுடன் அதே வீதியைத்

திருத்தியமைப்பதற்காக ஒரே சமமான 02 மதிப்பீடுகள் தயாரித்து அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றுடன் ஒரே நாளில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) 2016 திசெம்பர் 16 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 248 அடி நீளம் முதல் 343 அடி நீளம் வரை 95 அடி நீளமான பகுதியில் மாத்திரம் 80 சதவீத அளவை மாத்திரம் நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட ABC கலவை மற்றும் முற்கலவை என்பன முழுமையாக கழன்றிருந்ததுடன் வீதியின் ஆரம்ப இடத்திலிருந்து 100 அடி தூரத்தில் வீதியின் மத்தியில் 2 அடி நீளத்திலும் 1 அடி 6 அங்குல அகலத்திலும் குழியொன்று ஏற்பட்டிருந்தது. மதிப்பீட்டின் பிரகாரம் முற்கலவையிடல் 2.5'' ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பௌதீக பரிசோதனையின் பிரகாரம் ½'' அளவில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஒரு வருடமான குறுகிய காலத்தில் அந்த நிர்மாணங்கள் அழிவடைந்து சென்றமையால் மேற்கூறப்பட்ட நிர்மாணங்கள் சரியான நியமத்திலும் முறையான மேற்பார்வையின் கீழும் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 50 செலவின விடயங்களில் ரூபா 7,825,043 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை ஸ்தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்காக விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு வேலை கையளிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அலகு செயற்பட்டிருக்கவில்லை.

## 4.5 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாதுள்ள கணக்காய்வு ஐயவினாக்கள்

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கணிப்பீடு செய்யக்கூடிய ரூபா 564,476 பெறுமதியான 01 கணக்காய்வு ஐயவினாவிற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) செலவின விடயங்கள் சரியாக வகைப்படுத்தப்படாமை<br>(ii) பேரேட்டுக் கணக்குகளும் பட்டோலைகளும் இணங்காமை<br>(iii) கணக்குகளிலிருந்து கைவிடல் |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) சொத்துக் கட்டுப்பாடு | சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை மற்றும் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற சொத்துக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமை. |